செ.வெ.எண்: 51 நாள்:22.09.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள முன்னாள் படைவீரர்களின் குறைகளை அரசு அலுவலர்கள் உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் முன்னாள் படைவீரர்கள் நலத்துறையின் சார்பில் முன்னாள் படைவீரர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (22.09.2016) நடைபெற்றது.

இந்த சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்தும், பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசியதாவது:

தமிழகஅரசு முன்னாள் படைவீரர்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஒவ்வொரு மாதமும் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடத்த உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள முன்னாள் படைவீரர்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மேலும் முன்னாள் படைவீரர்கள் குடும்பத்தை சார்ந்த ஒரு பயனாளிக்கு ரூ.20000 மதிப்பில் திருமண உதவித்தொகைக்கான காசோலையும், 12ம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் முதலிடம் பெற்ற 1 நபருக்கு ரூ.5000ம், இரண்டாம் இடம் பெற்ற 1 நபருக்கு ரூ.3000 நிதியுதவித்தொகைக்கான காசோலையும் என மொத்தம் ரூ.28000 மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இக்கூட்டத்தில் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக முன்னாள் படைவீரர்களிடமிருந்து 44 மனுக்கள் பெறப்பட்டு, இம்மனுக்களின் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.சாந்தி, உதவி இயக்குநர் (முன்னாள் படைவீரர் நலன்) விங் கமாண்டர்(ஓய்வு) வி.கணேசன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**